தமிழநாடு சட்டமன்றப்பேரவை

வியாழக்கிழமை, 1979 நவம்பர் 8

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்— விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்:

காவேரிப்பட்டணத்தில் வீட்டு மனைகள்

குறுகிய கால வினா எண். 5— டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டணம் நகரத்தின் ஒரு பகுதியான '' தாம்சன் பேட்டை '' பகுதியினை அங்கே குடியிருப்போர்களுக்கு மனைப்பட்டா வழங்க ஆணையிட்டுள்ளதா ?

(அ) அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தாலுக்கா, காவேரிப்பட்டணம் கிராமத்திலுள்ள 7.01 ஏக்கர் நிலத்தை காவேரிப்பட்டினம் பேரூராட்சிக்கு நகர அபிவிருத்தி திட்டத்திற்காக நிலக்கிரயம் இல்லாமல் ஒப்படை செய்யப்பட்டது. ஆனால் அந்த பஞ்சாயத்து மேற்கண்டநிலத்தைநகர அபிவிருத்திக்காக பயன்படுத்தாமல் பொது மக்களால் வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்ய அனுமதித்தது. இந்த நிலத்தில் உள்ள அக்ரமிப்புக்களை தற்போது அகற்றவது என்பது இயலாத காரியம் என்பதாலும், ஆக்கிரமிப்பு செய்தவர்கள் நிலக்கிரயம் செலுத்த வசதி உள்ளவர்களாக இருப்பதாலும், 4—8—78 தேதியிட்ட வருவாய்த் துறையின் அரசு ஆணை எண். 1845-ல் அரசு, ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு நிலத்தை விற்க காவேரிப்பட்டணம்

பேரூராட்சிக்கு அனுமதி வழங்கியுள்ளது; பேரூராட்சி நிலக்கிரயம் கட்டினால், ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு பேரூராட்சி விற்பனை ஒப்பாவணம் (sale deed) வழங்கப்படும்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பட்டணம் நகரத்தின் ஒரு பகுதியான ''தாம்சன் பேட்டை''யில் நீண்ட காலமாக பலர் குடியிருந்து வருவதன் காரணமாக, அவர்களுக்கு அதற்குபட்டா கொடுக்கின்ற நேரத்தில் சதுரஅடி ரூ. 2–20 என்று விலை நிர்ணயித்து அறிவிப்பு கொடுத்திருக்கிறர்கள். நீண்ட காலமாக அவர்கள் அங்கே குடியிருந்து வருவதன் காரணமாக, அவர்களுக்கு இனாமாக பட்டா செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1919ஆம் வருஷம் அந்த நிலம் பஞ்சாயத்திற்கு கொடுக்கப்பட்டது. அந்த பஞ்சாயத்தின் அபிவிருத்திக்காக அந்த நிலம் கொடுக்கப்பட்டது. ஆனால், இதிலே இனாமாக கொடுக்கவேண்டும் என்று சொல்லும்போது, அரசு யோசிக்க வேண்டியதற்குக் காரணம், ஆக்கிரமிப்பாளர்களுக்கு இனாமாக நிலம் கொடுத்தால், இன்னும் ஆக்கிரமிப்பு செய்த கொண்டிருப்பார்கள். ஆகவே, ஆக்கிரமிப்பாளர்களை ஒத்தாசை செய்கின்ற வகையில் அமையாமல் ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றி பட்டாசெய்து கொடுப்பதுபற்றி தான் அரசு யோசிக்கும். ஆனால், குறிப்பாக இதைப்பற்றிச் சொல்ல வேண்டுமானால், 1919ஆம் வருஷத்திலே இருந்து பலர் பெரிய பெரிய வீடுகள் கட்டியிருக்கிறார்கள். மேலும் மிகவும் வசதி படைத்தவர்கள் பலர் அங்கே வீடுகள் கட்டியிருக்கிறார்கள். அதை இந்த அரசு எண்ணிப் பார்க்கிறபோது, வசதியுள்ளவர்கள் பெரிய வீடுகள், மாடிகள் கட்டியுள்ளதை இடித்துத் தள்ளுவது நியாய அடிப்படையில் இயலாத காரணத்தினால், அவர்களிடத்தில் அரசு எந்த அளவுக்கு நிலத்திற்குப் பணம் கிடைக்குமோ, அதைவிட அதிகமாகவே வசதியுள்ளவர்கள் இடத்தில் வாங்க வேண்டுமென்று இந்த அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது. ஏழை எளியவர்களுக்கு இலவசமாக கொடுப்பது பற்றி அரசு யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, வசதி படைத்தவர்களுக்கு விலையை நிர்ணயித்து, வசதியற்றவர்களுக்கு இனாமாகக் கொடுக்கின்ற அதே நேரத்தில், இதை எவ்வளவு விரைவில் அதாவது குறிப்பிட்ட இந்த காலத்திற்குள் செய்யப்படும் என்பதை இந்த அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, மிக விரைவில் செய்யும்.